**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டுர்,**
**தேதி: 23.10.2025**
**OS. No. 25/2022**
**வழக்கு சாட்சி PW.1–ஜெயக்குமார் , த/பெ.பழனிசாமி**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1) என்னுடைய நிலத்தில் பக்கத்து நிலத்துகாரரான பிரதிவாதி அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்ததாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இரண்டு முறை ஆக்கிரமிப்பு செய்ய வந்தார்கள் அதை நாங்கள் தடுத்து விட்டோம். நானும், என் அக்கா மல்லிகா, என் தாயார் தங்கம்மாள் மூவரும் சேர்ந்து இந்த வழக்கை தாக்கல செய்துள்ளோம். இந்த வழக்கு தாக்கல் செய்தபோது என் அக்கா மல்லிகாவின் முகவரி என்னவென்றால் வடக்கு காடு, கந்தனூர் ஆகும். பிரதிவாதியின் வயது இந்த வழக்கு தாக்கல் செய்தபோது என்னவென்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் என்ன வயது சொல்லியுள்ளோம் என்றால் சுமார் 45 வயது என்று சொல்லியிருப்போம். இந்த வழக்கின் விவரங்கள் வழக்கறிஞருக்கு யார் தெரிவித்தார்கள் என்றால் நான் தான் தெரிவித்தேன்.

2) இந்த வழககில் பிரதிவாதி பதில் தாக்கல் செய்துள்ள விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அந்த பதிலுரையில் பிரதிவாதியின் வயது மற்றும் என் அக்கா மல்லிகாவின் முகவரி தவறாக சொல்லியுள்ளதாக குறிப்பிட்டுள்ள விவரம் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். அதன் பிறகும் அதை திருத்தம் செய்வதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். இ ந்த வழக்கில் முதல் நோக்கிலேயே தவறான சங்கதிகள் குறித்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் சொத்து விவரத்தில் எத்தனை செட்டியூல் சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் இரண்டு செட்டியூல்களாக காண்பிக்கப்பட்டுள்ளது. A செட்டியூலின் சர்வே எண் என்னவென்றால் ச.எண்.81 ஆகும், அதன் பட்டா எண்.1315 ஆகும். வழக்குரையில் A செட்டியூல் சொத்தாக ச.எண்.81 மட்டும் தான் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் ஆமாம், வேறு சர்வே எண் எதுவும் காட்டப்படவில்லை. அதன் ஹெக்டேர் அளவுகளாக

எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை, சென்ட் கணக்கு எனக்கு தெரியும், 1.62 ஏக்கர் ஆகும். வழக்குரையை நான் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம்.

3) A செட்டியூல் சொத்தில் சர்வே எண்ணின் உ ட்பிரிவும், ஹெக்டேர் அளவுகளும் என்னால் சொல்ல இயலுமா என்றால் ச.எண்.81/3B ஆகும், ஹெக்டேர் அளவுகள் எனக்கு தெரியவில்லை. B செட்டியூலாக என்ன சொத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ச.எண்.77, அதற்கு உட்பிரிவு எதுவும் காட்டப்படவில்லை. அதன் மொத்த பரப்பு எவ்வளவு காண்பிக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியவில்லை, எங்களுக்கு பாத்தியப்பட்டது அதில் 4 சென்ட் நிலம் தான். மேற்கண்ட சொத்துக்கள் என் தந்தை 1995 ல் கிரையம் பெற்றதன் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்று வழக்குரையில் சொல்லியுள்ளோம், தேதி, மாதம் எனக்கு தெரியவில்லை. வழக்கில் தேதி, மாதம் சொல்லியுள்ளோம், எனக்கு தற்போது நினைவில்லை. என் தந்தை 25.08.2022 ல் இறந்துவிட்டார். இந்த வழக்கு எந்த தேதியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் குறிப்பாக தெரியவில்லை, என் தந்தை இறந்து மூன்று மாதங்கள் கழித்து இந்த வழக்கு தாக்கல் செய்தோம். என் தந்தை இறந்து 1-1/2 வருடங்கள் ஆகிறது என்று வழக்குரையில் சொல்லியிருந்தால், அது தவறு என்றால் சரிதான்.

4) இந்த வழக்கில் என் தந்தை இறந்த தேதியை எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உள்நோக்கத்துடன் மேற்கண்ட விவரங்களை மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. A செட்டியூல் சொத்திற்கு பட்டா யார் யார் பெயரில் உள்ளது என்றால் என் தந்தை பழனிசாமி பெயரில் மட்டும் தான் உள்ளது. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு 11.11.2025 ம் தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

ஒம்/-திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.